Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 274

திங்கட்கிழமை
26 ஓகஸ்ட் 2024

ஆவணி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப இனி
தொடர்ந்து தேர்தல்
கூத்துத்தான்
நடக்கபோகுது போல"

# வரிக்குரிய செலவுகளை மக்களிடம் வெளிப்படுத்துவோம்

## தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர

கொழும்பு, ஓக. 26
வரியை அறவிடுவது மாத்திரமல்ல, இரண்டு மூன்று வருடங்களாகும் போது நீங்கள் செலுத்திய வரி எவ்வாறு செலவிடப்பட்டது என்ற விவரத்தை ஆண்டின் இறுதியில் உங்களுடைய அலைபேசிக்கு அனுப்பி வைப்போம் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.
வங்கிகள் மற்றும் நிதித்துறை மன்ற தொழில்வாண்மையாளர்களின் தேசிய மாநாடு மொனாக் இம்பீரியல் ஹோட்டல் வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகை 11



# 50 கிலோ உர மூடையை ரூ. 5 ஆயிரத்துக்கு வழங்குவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் உறுதிமொழி

அநுராதபுரம், ஓக. 26
விவசாயத்துறையை கட்டியெழுப்பும் நோக்கில் உயர்தரமான விதைகளையும், உயர் தரமான உரங்களையும் பெற்றுக் கொடுப்பதோடு 50 கிலோ கிராம் உள்ள உரமூடையை 5 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக் கொடுக்கவும், சகித்துக் கொள்ளக் கூடிய விலையில் இரசாயன திரவப் பொருட்கள், கமநல சேவை மத்திய நிலையங்கள் ஊடாக, ஊழல் மோசடி அற்ற முறையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, எரிபொருள் 11



# ரணில் வெற்றிபெற்றால் நாடாளுமன்றம் கலைப்பு

## பிரதமர் தினேஷ் அறிவிப்பு



**கொழும்பு, ஓகஸ்ட் 26**
**ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.** 06

# அநுரகுமார, சஜித் பிரேமதாஸ தேர்தல் அறிக்கைகள் விரைவில்

கொழும்பு, ஓக. 26
இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்கள் இந்த வாரம் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட உள்ளனர்.
தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் அறிக்கையை முதன் முதலாக கொழும்பில் 11

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 3,06,081 பேர் வாக்களிக்கத் தகுதி

வவுனியா, ஓக. 26
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சரத்சந்திர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 585 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 11

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 26
இன்று திங்கட்கிழமை பாடசாலைகள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்தும் இவ்வாறு 06

## ஐ. எம்.எப்.

# நேரடி விவாதத்துக்கு சஜித், அநுர தயாரா?

## ரணில் சவால்



கொழும்பு, ஓக. 26
சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ.எம்.எப்.) செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றி சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் முன்னிலையில் நேரடி விவாதத்துக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கும், அநுர 11

# வடக்கு அதிகாரிகளின் கூத்து: விசாரணைகள் நிறைவடைவு

யாழ்ப்பாணம், ஓக. 26
இரத்மலானை அரசினர் விடுதியில் மது போதையில் அநாகரிகமாக நடந்துகொண்ட அதிகாரிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் முற்றுப்பெற்று தொடர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 11

# சிந்துஜாவின் கணவர் உயிர்மாய்ப்பு!

வவுனியா, ஓக. 26
மன்னார் மருத்துவமனையில் மருத்துவத்துறையினரின் கவனயீனத்தால் அண்மையில் உயிரிழந்த இளம் தாயான சிந்துஜாவின் கணவர் நேற்றுமுன்தினம் இரவு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
வவுனியா பணிக்கர் புளியங்குளத்தை சேர்ந்த எஸ். சுதன் (வயது - 26) என்பரே இவ்வாறு 11

## ஜனாதிபதித் தேர்தல்:

# 13,134 வாக்களிப்பு நிலையங்கள் 45 வாக்கு எண்ணும் நிலையங்கள்

கொழும்பு, ஓக. 26
ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 13 ஆயிரத்து 134 வாக்களிப்பு நிலையங்களும் 45 வாக்கு எண்ணும் நிலையங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், வாக்காளர் அட்டைகள் விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகுமெனவும், வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-ஓ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விடிவுக்காக வேறுபாடின்றி திரள்வோம்!

## பொதுக்கட்டமைப்பினர் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 26**

**சிதறிக்கிடக்கும் தமிழர்களை ஒன்றுதிரட்டும் நோக்கத்தை பிரதான நோக்காகக் கொண்டு தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக 'நமக்காக நாம்' என்ற அடிப்படையில் மக்கள் தாமாக முன்வந்து பரப்புரையை முன்னெடுக்கவேண்டும். இதில் நாங்கள் நீங்கள் என்ற வேறுபாடு கிடையாது.**

-இவ்வாறு தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ம.நிலாந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் என்பது தமிழர்களை ஒன்று திரட்டுவது என்பதனை பிரதான மாகக் கொண்டது. சிதறிக்கிடக்கும் தமிழர்களை ஒன்றுதிரட்டுவது என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் தேசமாகத் திரள்வதே. எமது பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் வேறு கட்சி பாரம்பரியத்தில் வந்தவர். அவர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் பிரதிநிதியாகவே போட்டியிடுகிறார். எனவே அந்தப் பொது நிலைப்பாட்டை முன்வைத்து தமிழ் மக்களை திரட்டுவது என்பதுதான் எமது நோக்கம். எனவே பொதுவேட்பாளருக்கு ஆதரவான பரப்புரைக்குத் தேவையான மூல ஆவணங்களைத் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பிடம் இருந்து பெற்றுக்கொண்டு பரப்புரையை மக்களே முன்னெடுங்கள், நீங்களே முடிவெடுங்கள். இது நாங்கள் எங்களுக்காக செய்யும் பரப்புரை. இதில் நாங்கள் நீங்கள் என்ற வேறுபாடு கிடையாது- என்றார். (ச-100)



# போரால் பாதித்தோருக்கு எனது ஆட்சியில் சுபீட்சம்

## சஜித் உறுதியளிப்பு

கொழும்பு, ஓக.26

தாம் ஆட்சிக்கு வந்தால், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் சர்வதேச உதவி மாநாட்டைக் கூட்டத் திட்டமிட்டுள்ளேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் - கிழக்கில் போரால் பாதித்தோருக்கு பல செயற்றிட்டங்களை நாம் நடைமுறைப்படுத்துவோம். அதற்காக சர்வதேச உதவி மாநாட்டைக் கூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ரணிலுக்கு ஆதரவளித்த தனியார் பஸ் சங்கங்கள்

கொழும்பு, ஓக.26

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் உட்பட 10 போக்குவரத்துச் சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளன.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன உள்ளிட்ட சங்கங்களின் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

மீண்டும் எரிபொருள் வரிசை ஏற்படுவதைத் தாம் விரும்பவில்லை எனச் சுட்டிக்காட்டிய போக்குவரத்துச் சங்கத்தின் பிரதிநிதிகள், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள முடியாமல் தாம் எதிர்கொண்ட இன்னல்களை மறக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (ச)

# கூட்டுறவு அமைப்புகளை சந்தித்தார் பொதுவேட்பாளர்

யாழ்ப்பாணம், ஓக. 26

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா. அரியநேந்திரன் பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகிறார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மாவட்டக் கூட்டுறவு அமைப்புகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. (ச- 20,27,100)



# நாம் பொறுப்பல்ல!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றமைக்கு மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசாங்கமே காரணம். நாம் நாட்டை வங்குரோத்தடையச் செய்யவில்லை என்று ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு உமா ஓயா திட்டத்தையும், சம்பூர் மின்சாரத் திட்டத்தையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருந்தால், 2022ஆம் ஆண்டு இலங்கையில் மின்சார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




# இல்லியாஸுக்கு பதில் புதிய வேட்பாளர்

கொழும்பு, ஓக.26

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருந்த நிலையில் உயிரிழந்த மருத்துவர் ஹைதுரூஸ் மொஹமட் இல்லியாஸுக்குப் பதிலாக வேறொரு வேட்பாளரை முன்நிறுத்த சந்தர்ப்பம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவர் சார்பில் வேட்புமனுவில் கையொப்பமிட்டவருக்கு வேறொரு வேட்பாளரை பரிந்துரைக்க முடியும்.

எனினும் வாக்குச்சீட்டில் மொஹமட் இல்லியாஸின் வாக்காளர் சின்னமும் பெயரும் அச்சிடப்பட்டுள்ளதால் அவற்றில் மாற்றங்கள் எதுவும் இடம்பெறமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார். (ச-சி)



# மக்களின் கையில் முடிவு

## மல்கம் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்கள் தன்னைச் சந்தித்தபோதிலும் எந்த ஒரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தீர்மானத்தை எடுக்கவேண்டிய பொறுப்பு பொதுமக்களையே சாரும்.

இதுவே கத்தோலிக்க சபையினது நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# உள்ளூராட்சித் தேர்தல்; குழப்பத்தில் பெரமுன

கொழும்பு, ஓக. 26

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு வேட்புமனு தாக்கல் செய்திருந்த உறுப்பினர்களுள் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளதால் கட்சிக்குள் குழப்பகர நிலை தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையோடு உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் தேர்தல் ஆணைக்குழு உள்ளது.

ஏற்கனவே முன்வைக்கப்பட்ட வேட்புமனுவின் பிரகாரமே தேர்வு இடம்பெறும். வேட்புமனுக்களை இரத்துச் செய்வதாயின் சட்டதிருத்தம் அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையோடு உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டால் அது தமக்குச் சிக்கலாக அமையும் என்றும் தேர்தலில் வெற்றிபெற்றால்கூட உறுப்புரிமை பறிபோகலாம் எனவும் மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் அஞ்சுகின்றனர். இதனால் சிலர் நாமல் பக்கம் சாய தொடங்கியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் திருவிழாவின் 18ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.26

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

18 ஆம் நாள் நிகழ்வு, நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம முத்தமிழ்க்குருமணி கலாநிதி நா. சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக உடுவில் பிரதேச செயலர் பாலசுந்தரம் ஜெயகரன், சிறப்பு அதிதியாக யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி கவின்ஜா நவஜீவா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விஷேட நிகழ்வாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (45)




சிறி நதியா
நகைமாடம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2709


## பவள விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஓக.26

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் பவள விழாவும் 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' நூல் வெளியீடும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுவார். நிகழ்வில் ஆசி உரைகள், ஆவணச் சித்திரம், நடனம், மாவட்ட ரீதியாக வருகையாளர்களின் பிரதிநிதிகள் உரைகள், நூல் வெளியீடு, விழா நாயகர் கௌரவிப்பு ஆகிய பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறுமென சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## சண்டிலிப்பாயில் விற்பனைச் சந்தை

கொழும்பு, ஓக.26

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படும் விற்பனைச் சந்தை நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## ஆன்மீக அருளுரை

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்றது. இந்த வரிசையில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் 'புது வாழ்வு' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ச-66)

## அமிர்தலிங்கத்தின் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஓக.26

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழரான அ. அமிர்தலிங்கலிங்கத்தின் 97 ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் தமிழகத்தின் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அமிர்தலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரை ஆற்றினார். நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் ஆயர் கலாநிதி.வி.பத்மதயாளன் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து அமிர்தலிங்கத்தின் 97 ஆவது பிறந்த நாள் நினைவு இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ச-66)








### மாம்பழக் கதையின் நாயகனே!

நல்லூர்ப் பெரும் பதியில் நல
முறவே வீற்றிருக்கும் வேலவா!
அடியவர்கள் குறைகள் தீர்க்கும்
அலங்காரக் கந்தா!
மாம்பழத்திற்காய் உலகை
வலம் வந்தாய்!
கோபம் கொண்டு கோவண
ஆண்டியாய் பழனி மலை
மீது பழம் நீயாக நிண்டும்
நாரதர் கலகம் கின்றும்
முடியவில்லை மாம்பழக் கதையின்
நாயகனே பதில் கூறையா!

■ நயினை விசு இராசநாயகம்.

### நீயே தஞ்சம் முருகா!

மஞ்சைதனில் ஏறுகின்ற முருகா!
கொஞ்சுமெழில்
கோவிலுறை குமரா!
மஞ்சமதில் தோன்றுகின்ற கந்தா!
தஞ்சமது நீயேதான் வேலா!

■ ப.மகேந்திரதாசன்

### உன்னை நினைத்தால் வாழலாம்

உன்னை நம்பினால் வாழலாம்
உலகை வென்றே ஆளலாம்
எண்ணிய யாவையும் அடையலாம்
ஏற்றங்கள் சேர்த்து வாழலாம் திண்
ணிய நெஞ்சமறை பெறலாம் தேசத்
தின் மாண்பினைக் காக்கலாம்
வண்ணமயிலேறும் நல்லைக் கந்
தனே வணங்கி வலம் வருகிறோம்
வழிகாட்டு...!

■ மதுரகவி

### எனைக் காப்பாய்

பல்லவி

மனதினில் கோவில் கட்டி
மங்கல விளக்கேற்றி
மகிழ்த்துனைப் பாடி நிற்பேன்
மயிலோனே!
(மனதில்)

அனுபல்லவி

தினம் உன் திருப்புகழைத்
தீந்தமிழிற் பாடி தேசங்கள்
எங்கணும் நான்
ஒலிக்க வைப்பேன்
(மனதில்)

சரணம்

மலர் மாலைகள் சூடி மஞ்சத்தில்
உனை ஏற்றி
மனதாரவே உன்னை நான்
துதிப்பேன்!
புலரும் பொழுதினிலே பூ
மலர்கள் தூவிப் புத்தமுதும்
எனக்கு நான் படைப்பேன்
(மனதில்)

அனுதினமும் தொழுது
ஆனந்தமே அடைவேன்!
ஆறு முகனே வந்து அருள்
தருவாய்!
மன இருளை நீக்க மாறாத
வினை போக்கி,
மனங்கனிந்தே வந்து எனைக்
காப்பாய்!

■ கலாபூஷணம் கீழ்கரைவை.
கி.குலசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.26
புங்குடுதீவு, பாணாவிடைச் சிவன்கோவிலில் 1008 சங்காபிஷேக மண்டலாபிஷேக பூர்த்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பெருவிழாவில் கும்பாபிஷேக இறுவட்டு வெளியீடும், கும்பாபிஷேக பிரதம சிவாச்சிரியார், குருமார்கள், கட்டடக் கலைஞர்கள் கௌரவிப்பும், ஞாபகச் சின்னங்களும் வழங்கப்படவுள்ளன என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டமான நாள். நெருக்கடி நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு முடிவு காண்பீர். திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத நெருக்கடி தோன்றும். முயற்சி இழுபறியாகும். மனக் குழப்பம் அதிகரிக்கும்.

**இடபம்:** நெருக்கடி விலகும் நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வரும். செலவுகள் அதிகரிக்கும். கவனமாக செயற்பட வேண்டிய நாள். வரவை விட செலவு அதிகரிக்கும். மனம் சோர்வடையும். வெளியூர் பயணத்தை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** முன்னேற்றமான நாள். தடை விலகும். எதிர்பார்த்த வரவு வரும். முயற்சி நிறைவேறும். நிதானமாக செயற்பட வேண்டிய நாள். நீங்கள் நினைப்பது ஒன்றாகவும் நடப்பது வேறாகவும் இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** விருப்பம் பூர்த்தியாகும் நாள். தொழிலை விரிவு செய்யும் முயற்சியை மேற்கொள்வீர். எதிர்பார்த்த பணம் வரும். செயல்களில் சங்கடம் காணும் நாள். பிறரை அனுசரித்துச் செல்வது நல்லது. நெருக்கடி விலகும் நாள்.

**சிம்மம்:** யோகமான நாள். திட்டமிட்டிருந்த செயல் நடந்தேறும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும் நாள். உங்கள் மனச்சங்கடம் உண்டாகும். அளவுக்கு பிறருடைய செயற்பாடு இருக்கும். நிதானம் காப்பது நல்லது.

**கன்னி:** தெய்வ அருளால் குறை தீரும் நாள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். செல்வாக்கு உயரும். தடைகளை சந்திக்கும் நாள். அலைச்சல் அதிகரித்து உடல் சோர்வடையும். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்:** விருப்பம் நிறைவேறும் நாள். கூட்டுத் தொழிலில் இருந்த பிரச்சினைகளுக்கு முடிவு காண்பீர். நண்பர்கள் ஒத்துழைப்பர். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகளை இன்று ஒத்தி வைப்பது நல்லது.

**விருச்சிகம்:** எதிரி விலகிச் செல்லும் நாள். மனக்குழப்பம் தீரும். தொழிலில் உண்டான போட்டி விலகும். உடல்நிலை சீராகும். வழிபாட்டால் சங்கடம் விலகும் நாள். செயல்களில் முழுமையான கவனம் தேவை.

**தனுசு:** செயல் வெற்றியாகும் நாள். உங்கள் முயற்சியில் எதிர்பார்த்த இலாபத்தை அடைவீர். வரவேண்டிய பணம் வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைகளைத் தாண்டி வெற்றிபெற வேண்டிய நாள்.

**மகரம்:** நினைத்தது நிறைவேறும் நாள். தொழிலில் இருந்த தடை விலகும். வியாபாரம் லாபமடையும். தெய்வத்தை வழிபட்டு செயற்பட வேண்டிய நாள். அலைச்சல் அதிகரிக்கும். முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். வியாபாரத்தில் இருந்த சங்கடம் விலகும். பொருளாதார நெருக்கடி நீங்கும். குழப்பத்துக்கு ஆளாகும் நாள். உங்கள் செயல்களில் எதிர்பாராத தடைகளை சந்திப்பீர்.

**மீனம்:** நெருக்கடி நீங்கும் நாள். குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். உங்கள் முயற்சி இலாபமடையும். எதிர்பார்த்த பணம் வரும். தடைகளை சந்திக்கும் நாள். குடும்பத்தில் சில பிரச்சினை தோன்றும்.

# பொன். சிவகுமாரன் ஜனனதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.26
ஈழத்தமிழின விடுதலைக்காக உயிர்நீத்த முதலாவது தற்கொடையாளர் தியாகி பொன்.சிவகுமாரனின் 74 ஆவது ஜனன நிகழ்வு உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் உரும்பிராய் சந்தியிலுள்ள உருவச் சிலையடியில் இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் தியாகி பொன்.சிவகுமாரனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு தொடர்ந்து அவரது பிறந்தநாள் நினைவாக மக்களுக்குப் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ரி-66)

# 7 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

யாழ்ப்பாணம், ஓக.26
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் முருகன் ஆலய 7ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழாவில் மாம்பழமொன்று ஏலம் விடப்பட்டது. அந்த மாம்பழம் 7 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது. (ரி-27)



# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக.26
யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்கு குடியிருப்பு அருள்வாளர் ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி திருக்கோயில் ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ச-45)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.26
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் விஷேட உரை வழங்கிய தமிழ்நாடு சிவப் பணிச்செம்மல் முனைவர் வே. சங்கரநாராயணன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனனால் கௌரவிக்கப்பட்டார். (45)

# மணிவிழா

யாழ்ப்பாணம், ஓக.26
மெய்யியல் அளவையியல் பேராசான் சு.சயந்தனின் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ரி)

# 'பன்முகன்' நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஓக.26
ஆசிரியரும் நாடகரும் பண்பாட்டாளரும் கூட்டுறவாளரும் அரசியலாளருமான க.விஜயசேகரன் பற்றிய பன்முகன் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் கிளிநொச்சி ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பங்கேற்கவுள்ளார். (ரி-13)

# கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.26
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று திங்கட்கிழமை சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-45)

# கிருஷ்ண ஜெயந்தி பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக.26
வட்டுக்கோடடை தெக்ககணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி பூஜை நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். (ச-45)





# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை

யாழ்ப்பாணம், ஓக.26
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார அலகினால் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை, அபிவிருத்தி உத்தியோகத்தர் சாமிளா தம்பிப்பிள்ளை தலைமையில் முகமாலை ஞானவைரவர் அறநெறிப்பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-45-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும்....!

'முஸ்லிம் தலைவர்களின் இரட்டை நிலைப்பாட்டுக் கொள்கை தற்போதைய ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்கின்றது. கட்சிகளின் தலைவர்கள் சஜித் பக்கமாகவும், அதே கட்சிகளின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலின் பக்கமாகவும் நிற்கின்றனர். இதன்மூலம் யார் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றாலும், அவர்களால் அடுத்த ஜனாதிபதியை இலகுவாக அணுகக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது நுட்பமான - இரட்டை வேடதாரித்தனம் இப்படி முஸ்லிம் அரசியல்வாதிகளின் தோலை உரித்திருப்பவர் சிங்கள அரசியல்வாதியோ, தமிழ் அரசியல்வாதியோ அல்லர். அதே முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த பைஸல் முஸ்தபா தான். பாம்பின் கால் பாம்பறியும் என்பதைப் போல, தம்மின அரசியல்வாதிகளின் இரட்டைத்தனமான போக்கை அவரே வெளிப்படுத்தியிருக்கிறார்.

இப்போது மட்டுமல்ல, எப்போதுமே அதிகாரக் காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப்பக்கம் சாய்ந்து , தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதே முஸ்லிம் அரசியல்வாதிகளின் மாறாக் கொள்கையாக இருந்தது; இருந்தும் வருகின்றது. 'எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நாம் ஆளுங்கட்சியில் இருப்போம்' என்ற பாதையில் தான் அவர்களின் அரசியல்பயணம் நிகழ்கின்றது. அதற்கு அவர்கள் சொல்லிக்கொள்ளும் காரணம், 'எமது மக்களின் அபிவிருத்திக்காக நாங்கள் ஆட்சியாளர்களுடன் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எமது மக்களுக்கு எதுவுமே செய்யமுடியாமல் போய்விடும்' என்பது தான். அதிகாரக் கதிரையின் சொகுசைதாம் அனுபவிப்பதற்காக, 'மக்கள் நலனுக்காக' என்ற கவசத்தைப் பயன்படுத்துவதே முஸ்லிம் அரசியல்வாதிகளின் வாடிக்கை. அதே யுக்தியை இப்போது வேறுவிதமாகக் கைக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இந்த ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கிடையே மிகப்பலமான போட்டி நிலவுகின்றது. சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க என்ற மூவரில் யார் ஜனாதிபதிக் கதிரையைக் கைப்பற்றப்போகிறார்கள் என்பது செப்ரெம்பர் 21 ஆம் திகதி தேர்தல் முடிவுறும் வரை விடைதெரியாக் கேள்விதான். எனவே தாம் ஆதரிக்கும் வேட்பாளர் தோற்றுப்போனால் பின்னர் வென்றவருடன் ஆட்சியில் பங்கேற்கமுடியாமல் போய்விடும். அதற்காகத்தான் முஸ்லிம் கட்சியின் தலைவர்கள் ஒரு வேட்பாளருக்கும், பிரதித் தலைவர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சஜித்துடன் கைகோர்த்தாலும் அந்தக்கட்சியின் பிரதித் தலைவர் அலி சாஹிர் மௌலானா, ரணில் அணிக்கு தாவியுள்ளார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சஜித்துக்காக தோகை விரித்தாடிவரும் நிலையில், அந்தக்கட்சியின் உப தலைவர் இஷாக் ரஹ்மான் ரணிலுக்கே தாளம் போடுகிறார்.

வெளிப்பார்வைக்கு அந்தக் கட்சிகளில் முரண்பாடு ஏற்பட்டே இப்படி வேறு வேறு வேட்பாளர்களை ஆதரிக்கின்றனர் என்று தோன்றினாலும், உண்மை அதுவல்ல. கட்சித் தலைவர்களின் ஆசீர்வாதத்துடேனேயே கட்சியின் பிரதித்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றைய வேட்பாளரின் பாசறைக்குள் புகுந்து துண்டைப்போட்டு இடம்பிடித்துள்ளனர். கட்சித்தலைவர் ஆதரிப்பவர் வெற்றியீட்டினால் பின்னர் மனந்திருந்திய மகன்களாக பிரதித்தலைவர்கள் மீண்டும் கட்சித் தலைவரின் அழைப்பில் உள்ளீர்க்கப்படுவார்கள். மாறாக இரண்டாம் கட்டத்தலைவர்கள் ஆதரிப்பவர் வென்றால், தலைவரை அழைத்து ஆட்சியில் பங்குவாங்கிக் கொடுப்பார்கள். எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகளுக்கு சஜித் வென்றாலென்ன, ரணில் வென்றாலென்ன ஆட்சியில் பங்கு நிச்சயம். அதற்கு இப்போதே துண்டைப்போட்டு இடம்பிடித்துவிட்டார்கள். இதனைத்தான் பைஸல் முஸ்தபா மோப்பம் பிடித்து வெளிப்படுத்தியுள்ளார். இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் நமக்கொரு கவலையில்லை என்ற கொள்கை இருக்கும்வரை முஸ்லிம் கட்சிகளின் காட்டில் அதிகார மழைக்கு பஞ்சமில்லை.



# உள்ளூராட்சித் தேர்தல்; தற்போது பணமில்லை

### தேர்தல் ஆணைக்குழு கைவிரிப்பு

**கொழும்பு, ஓக. 26**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணம் தற்போது இல்லை என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.எல்.ஏ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அடிப்படைச் செலவுகள் தவிர ஏனைய செலவுகள் குறித்து திறைசேரி பரிசீலித்து வருகிறது.
அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்த சில வேட்பாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். மேலும் சில வேட்பாளர்கள் இறந்துவிட்டனர்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று அடுத்தவாரம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

## அஞ்சல் பணியாளர் விடுமுறை இரத்து!

கொழும்பு, ஓக. 26
ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரையில் சகல அஞ்சல் பணியாளர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை கருத்திற்கொண்டுவிடுமுறையை இரத்துச்செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்கவேண்டுமாயின் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி அஞ்சல்மா மா அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## 'யுக்திய' 623பேர் கைது

கொழும்பு, ஓக. 26
நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின் போது கடந்த 24 மணித்தியாலத்துக்குள் 623 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த சந்தேகநபர்கள் போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சந்தேகநபர்களிடமிருந்து 198 கிராம் 737 மில்லி கிராம் ஹெரோய்ன், 228 கிராம் 26 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 2,538 கிராம் 657 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

இந்த வருடத்தில்

## இந்திய மீனவர் 333 பேர் கைது!

கொழும்பு, ஓக. 26
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 333 இந்திய கடற்றொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து 45 இந்திய இழுவை படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. (ச-இ)

## எரிசக்தி, விவசாயத்தில் தென்கொரியா முதலீடு

கொழும்பு, ஓக. 26
இலங்கையின் எரிசக்தி மற்றும் விவசாயத்துறையில் முதலீடு செய்வதற்கு தென்கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது. தென்கொரிய மக்கள் குடியரசின் முன்னணி தொழில் முயற்சியாளர் ஒருவருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இலங்கையில் முதலீடு செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

27.08.2024
செவ்வாய்க்கிழமை - ஆவணி - 11
சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம் : 03.05 - 04.35
பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்

**நாளொரு நல்வார்த்தை**

எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை.
வரலாறு ஆனவர்கள் எவரும் தனக்காக வாழ்ந்ததில்லை.
-காமராஜர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநூலகத்தில் வீரமணி

யாழ்ப்பாணம், ஓக. 26
யாழ்ப்பாணம் வருகை தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தனது பயணத்தின் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணப் பொதுநூலகத்துக்கும் சென்றிருந்தார். யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட ஒளிப் படங்கள் பொதுநூலகத்தின் முன்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இக் காட்சிகளை அவர் வேதனையுடன் பார்வையிட்டார். (அ-ஒ-66)

# பசு மாடொன்று திருடிய சந்தேகநபர்கள் கைது

5 இலட்சம் ரூபா பெறுமதியான பசு மாடொன்று வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட நிலையில் அதனைத் திருடி, விற்பனை செய்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காங்கேசந்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசு மாடொன்று வாழ்வாதாரத்துக்காக சாவகச்சேரியைச் சேர்ந்த பயனாளிக்கு வழங்கப்பட்ட நிலையில் அது திருட்டுப் போயிருந்தது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புப்பொலிஸார், அச்செழுவில்வைத்து சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன் திருட்டுப்போன பசுமாட்டை மீட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஓ-23)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபை நிதி (CF) 2024
## கேள்வி இல - IFB/2024/2

யாழ்ப்பாணம் மாநகரசபை பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

1. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை இல. 04/2016(i), 04/2016(ii) & 04/2016 (iii) என்பனவற்றிற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
3. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule/ Bidding data) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 221 6468, 021 222 2019)** என்னும் முகவரியிலிருந்து 26.08.2024 **ஆம் திகதியில் இருந்து** 08.09.2024 **ஆம்** திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் கீழ்க்காட்டப்பட்டுள்ள வரி உள்ளடங்கலான மீளளிக்கப்படாத கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) **தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 09.09.2024 **ஆம் திகதி மு.ப. 10:00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்
7. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
8. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 02.09.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வேலைத் தலங்களுக்கான களத்தரிசிப்பு இடம்பெறும்.
9. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வரி நீங்கலாக) | நிதி மூலம் | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் மற்றும் Speciality | மீளளிக்கப்படாத பணம் (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | | பாதுகாப்புப் பிணை தொகை (ரூபா.) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/W/CF/ 2024-II/1 | Improvement to Annathaimadam Street | 1.525 | CF | 49 | 27.10.2024 | 42 | C9 & C8 High way | 2,000.00 | 23,000.00 | 24.11.2024 |
| 2 | JMC/W/CF/ 2024-II/2 | Improvement to Vasanthapuram 1 st cross Street | 0.762 | CF | 49 | 27.10.2024 | 42 | C9 & C8 High way | 2,000.00 | 11,500.00 | 24.11.2024 |
| 3 | JMC/W/CF/ 2024-II/3 | Construction of Koddady Muthtamil 3rd By Lane Drainage Work - Stage II | 2.118 | CF | 63 | 10.11.2024 | 70 | C8 & C7 Irriga tion | 3,500.00 | 32,000.00 | 08.12.2024 |
| 4 | JMC/W/CF/ 2024-II/4 | Improvements to Nithiyaoli Cross Streets | 3.008 | CF | 63 | 10.11.2024 | 70 | C8 & C7 High way | 3,500.00 | 46,000.00 | 08.12.2024 |
| 5 | JMC/W/CF/ 2024-II/5 | Construction of Public Washroom Building at Jaffna Bus Stand | 25.423 | CF | 91 | 08.12.2024 | 112 | C5 & C4 Build ings | 6,500.00 | 382,000.00 | 05.01.2025 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**
**26.08.2024**

(er.42995) (N-1)


# நீரில் மூழ்கி இருவர் சாவு

கொழும்பு, ஓக. 26
இத்தேபன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இகலகந்த யகிரல பிரதேசத்தில் அமைந்துள்ள ஆனையிறவு எனப்படும் நீராடும் இடத்தில் குளிப்பதற்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இருவர் நேற்று மதியம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். எஸ்.கௌதம் (வயது-26), எஸ்.ஹர்ஷ நாத் (வயது - 28) இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஒ-இ)

## பாடசாலைகள்...

மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-ஒ-இ)

## ரணில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஜனாதிபதி தனது திட்டங்களை நாடாளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் தெளிவாக முன்வைத்துள்ளார்.

சிலர் ‘சர்வதேச நாணய நிதியத்தின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம்’ என்கின்றனர். சிலர் எதையாவது குறைவாகச் சொல்கின்றனர். ஆனால் ஒட்டுமொத்தமாக நாங்கள் ஒரு அரசாங்கம் என்ற வகையில் சர்வதேச அமைப்புகள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, நிதி வழங்கும் நாடுகள், பரிஸ் கிளப் உறுப்பினர்கள் போன்றவர்களுடன் கலந்துரையாடி தீர்மானித்த பாதையே இது.

நாங்கள் இன்னமும் கடனில் சிக்குண்டுள்ளோம். இலங்கை தொடர்ந்து இவ்வாறான கடன்நிலையில் நீடிக்கமுடியாது. மேலும் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரை ஆயுளைக் கொண்டுள்ள நாடாளுமன்றம் ஜனாதிபதியிடம் உள்ளது.

அவர் முதலில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுதிட்டம் குறித்து சிந்திக்கவேண்டும். அதற்கான கட்டமைப்பு நாடாளுமன்றத்தில்

நிறைவேற்றப்பட்டுள்ளது. தேர்தலின் பின்னர் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். இல்லையென்றால் அடுத்த மூன்று மாதங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பு இடம்பெறவேண்டும். பின்னர் நாடாளுமன்றத்தை கலைப்பதாக அறிவிப்பார்” - என்றார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிட்ட தமிழ்த் தலைவர்கள்; ரணிலுக்கே எங்களின் ஆதரவு

## முன்னாள் போராளிகள் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 26**

**எங்களின் தற்போதைய நெருக்கடியில் ஒன்றாக பொருளாதாரம் காணப்படுகின்றது. வடக்கு - கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு உதவித்திட்டங்கள் மற்றும் பொருளாதாரரீதியான செயற்றிட்டங்களை மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் உறுதியளித்துள்ளார். அந்த வகையில் அவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் எமது ஆதரவு.**

- இவ்வாறு வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சி தெரிவித்துள்ளது. அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் முன்னாள் போராளிகள் கைவிடப்பட்ட நிலையிலுள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் பதிவிக்காக சண்டை பிடிக்கிறார்களே தவிர முன்னாள் போராளிகள் தொடர்பில் பேசுவதில்லை. வடக்கு -கிழக்கில் உள்ள முன்னால் போராளிகளுக்கு பாதுகாப்புவேண்டும். வீணாக போராளிகளை அழைத்து விசாரணைகள் என்ற ரீதியில் கைதுகள் மேற்கொள்வதை தவிர்க்கவேண்டும். உதவித் திட்டங்கள் மற்றும் பொருளாதார ரீதியான செயற்றிட்டங்களை மேற்கொள்ளவேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவிசாய்த்துள்ளார்.

அதனால் நாம் அவரை நம்புகிறோம். எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக தெரிவித்ததன் பிரகாரம் எமது கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்ப தாக முடிவெடுத்துள்ளது - என்றனர். (ச-110-18)

## 'ஒன்லைன்' மூலம் கொள்வனவு கூடுதல் அவதானம் தேவை

யாழ்ப்பாணம், ஓக.26

தராசுகள் மற்றும் நிறுவை அளக்கும் கருவிகள் ஒன்லைன் மூலமாக கொள்வனவு செய்யப்படுவதாகவும், இது குறித்து அவதானமாக இருக்குமாறும் நிறுத்தல் அளத்தல் தரநிர்ணய திணைக்களப் பணிப்பாளர் அகுராந்திலக தெரிவித்தார். இவை நிறுத்தல் அளத்தல் தரநிர்ணய திணைக்கள அனுமதியின்றி கொள்வனவு செய்யப்படுவதாகவும், நிறுத்தல் அளத்தல் தரநிர்ணய திணைக்களச் சான்றிதழ் பெறாமல் நிறுத்தல் அளத்தல் கருவிகளைப் பாவிப்பது தண்டனைக்குரிய குற்றம் எனவும் தெரிவித்தார். (ஒ-45 -6)

## இலங்கைக்கு வரும் இந்தியப் போர்க்கப்பல்

கொழும்பு, ஓக. 26

இந்திய கடற்படைக்குச் சொந்தமான 'ஐ.என்.எஸ். மும்பை' எனும் போர்க்கப்பல் 3 நாள்கள் பயணம் மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

போர்க்கப்பல் தரித்துநிற்கும் காலப் பகுதியில் இந்திய - இலங்கை கடற்படையினருக்கு இடையில் அனுபவங்கள் பரிமாறிக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் இலங்கை கடற்படையினருடன் இணைந்து விளையாட்டு நிகழ்வுகள், யோகாசனம், கடற்பரப்பு தூய்மையாக்கல் ஆகிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)



## பண்டாரவன்னியன் 221 ஆவது நினைவு

வவுனியா, ஓக. 26

தேசிய வீரன் மாவீரன் பண்டாரவன்னியனின் 221 ஆவது ஞாபகார்த்த விழா நேற்றுக் காலை வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இடம்பெற்றது. இதன்போது பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன் சிறப்புரைகளும் இடம்பெற்றன. வவுனியா நகரசபை செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாட்டச் செயலர் பி. ஏ. சரத்சந்திர, உள்ளூராட்சி உதவிஆணையாளர் தெ.ரதீஸ்வரன் மற்றும் பொதுஅமைப்புகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

## 2,400 பேர் டெங்கால் பாதிப்பு



கொழும்பு, ஓக. 26

இந்த மாதத்தின் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 400 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. மேல் மாகாணம் மற்றும் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தேசிய டெங்குகட்டுப்பாட்டுபிரிவுகுறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## பாலியல் தொழிலாளர் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 26

நாட்டில் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தனது சமீபத்திய தரவுகளில் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் தவறான தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்கமைய இலங்கையில் 30 ஆயிரம் பேர் தவறான தொழில் செய்பவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை நாட்டில் சுமார் 80,000 ஓரினச்சேர்க்கையாளர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தினம் தெரியுமோ?

'டீஜே' பார்ட்டி அடிதடி பார்ட்டியா யாழ்ப்பாணக் கம்பஸில மாறினதைப் பற்றி அண்டைக்குப் பார்த்தானாங்களெல்லோ. ஆனால் அந்த அடிதடி பார்ட்டியோட முடிஞ்சு போகேலை. விட்டகுறை தொட்டகுறையா அது பிறகும் தொடர்ந்திருக்குது. பார்ட்டியில நாலாம் வருசக்காரருக்கும் மூண்டாம் வருசக்காரருக்கும் தான் சண்டை மூண்டது. பிறகு அது திசைமாறி மூண்டாம் வருசக்காரருக்குள்ளேயே கன்னை பிரிஞ்சு அடிபடத் தொடங்கிட்டினம். மூண்டாம் வருசக்காரரில் ஒரு குரூப்புக்கு வெளியாக்களை அடிபாட்டுக்காக கூப்பிட்டது பிடிக்கேலை. அதோட கம்பஸெண்டால் சனத்திட்ட இருக்கிற மரியாதையைக் காப்பாத்தவேணும் எண்டு மற்ற ஆக்களோட கதைச்சிருக்கிறாங்கள். ஆனால் மற்ற குரூப் இந்தக் கதையெல்லாம் கேக்க ரெடியில்லை. நல்லதுக்கு கதைச்ச பெடியளை 'நீங்கள் தான் எங்களை மாட்டி விட்டிட்டீங்கள், பைனல் இயரோட சேர்ந்து எங்களுக்கு துரோகம் செய்யிறீங்கள்' எண்டு கொழுவல் எடுத்து. அது கடும் சண்டையாகி ஒரு பெடியனுக்கு கைமுறியிற அளவுக்கு அடிச்சிருக்கினம். அப்பிடி அடிச்ச நாலு பேருக்கு இப்ப தற்காலிக வகுப்புத் தடை போட்டிருக்கு.

இப்பிடி கம்பஸ் எந்தநாளும் ரணகளமா இருக்கிறதுக்கு முக்கியமான காரணம் என்ன எண்டு அங்க படிக்கிறவையையும், படிப்பிக்கிறவையையும் கேட்டால் அவை ஒரேயொரு இடத்தைத்தான் காட்டுகினம். அந்த இடம் பரமேஸ்வரன் கோயிலுக்கும், பொங்கு தமிழ் பலகைக்கும் நடுவில இருக்கிற ஸ்டோன் பெஞ்ச் தான் (கல்லாசனம்). அந்தக் கல்லாசனத்துக்கு நிறைய நல்ல நினைவுகள் இருக்குத்தான். ஆனால் இப்ப அதில இருக்கிறவை அந்தக் கல்லாசனத்தை 'கள்ளா சனமா' மாத்திப்போட்டினம். எப்ப பார்த்தாலும் குடிச்சுப்போட்டு வந்து, அதால போற வாற பொம்பிளைப் பிள்ளையளுக்கு நக்கல் அடிக்கிறதுக்கும், பெடியளோட தனகிறதுக்கும் தான் அந்தக் கல்லாசனத்தில் இருக்கினம். பின்னேரம் சூரியன் கொஞ்சம் சரியத் தொடங்க, அந்தக் கல்லாசனத்துக்கு கிட்ட ஓட்டோக்களும் வரத் தொடங்கிடும். ஓட்டோக்களில இருந்து பியர் ரின்களும், போத்தில்களும் எடுத்து அந்தக் கல்லாசனத்தில வைச்சே பப்ளிக்கா குடிப்பினமாம். சிலவேளை ஆக்களுக்கு நல்லா ஏறினால் பியர் ரின், போத்தில் எல்லாம் அந்தக் கல்லாசனத்தோட போட்டிட்டு போடுவினம். வேலை வெட்டி இல்லாமல், உந்தக் கல்லாசனத்தில இருந்து தான் ஆரோட கொழுவலாம் ? எந்தப் பிள்ளைக்கு நக்கலடிக்கலாம்? எண்டு யோசிக்கிறவை. அண்டைக்கு நடந்த சண்டைக்குப் பிறகு, அந்தக் கல்லாசனத்தையும் காணேலை. அடிபட்ட குரூப் ஒண்டு அதையும் அடிச்சு நொருக்கிப் போட்டுது எண்டு கதை.

வழக்கமா இவ்வளவு நாளும் பெடி, பெட்டையள் இருந்து கதைக்கவெண்டு செய்த கல்லாசனம் இல்லாமல் போட்டுதெண்டால் கவலைதானே வரவேணும். ஆனால் ஏதோ நரகாசுரன் செத்தமாதிரி கனபிள்ளையள் அந்தக் கல்லாசனம் காணாமல் போனதைக் கொண்டாடுகினம். அந்தளவுக்கு அவைக்கு கல்லாசனத்தில இருக்கிறவை தொல்லை குடுத்திருக்கினம். கம்பஸ் மானத்தையும் வாங்கி இருக்கினம். இனிமேல் அந்தக் கல்லாசனத்தைக் கட்டுறதெண்டால் கோயிலுக்கும், பொங்குதமிழ் பலகைக்கும் அவமானத்தை உண்டாக்காமல் வேற எங்கையாவது மூலைக்குள்ள கட்டவேணும் எண்டது கம்பஸூக்கு உண்மையாவே படிச்சு முன்னேற்றத்துக்காக போனவையின்ர கோரிக்கை. அதை கம்பஸ் நிர்வாகம் கொஞ்சம் காதுகுடுத்துக் கேட்டால் நல்லது.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண் வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 317 4416, 077 501 3103

# மீளப் பெறப்பட்ட 5000 வாகனங்கள்

லீசிங் தவணையை சரியாகச் செலுத்தத் தவறிய 5000 வாகனங்களுக்கும் அதிகமானவை அந்தந்த நிறுவனங்களால் இந்த வருடத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று லீசிங் மற்றும் கடன் வழங்குநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த வருடத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டன.
லீசிங் தவணைகளை வழங்குவதாக வாகனங்களைப் பெற்று, நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தவணைகளைச் சரியாக செலுத்த முடியாத நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 12 . 1945
மறைவு 07 . 09 . 2023

### அமரர் கனகசபை பத்மநாதன்

திதி: அபரபக்க அட்டமி

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
நல் வழிப்படுத்திய எங்கள் குடும்பத் தலைவரே...
ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை தெய்வமே!
உங்கள் பிரிவுத்துயரம், உங்கள் நினைவலைகள்
இன்னும் எம் மனதில் பசுமையாகவுள்ளது...
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
உங்கள் நினைவுகளுடன்
தங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி... சாந்தி ... சாந்தி ...

நினைவுகளுடன்
அத்தியடி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(cs 56023) (N.I)

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 03 . 1958
மறைவு 24 . 08 . 2024

### சுவாம்பிள்ளை எட்வின்செல்வநாயகம்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசாவிளான் வடமூலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை எட்வின் செல்வநாயகம் நேற்று முன்தினம் (24.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பியப்பு - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஜோன்மேரி சன்ராலூட்ஸின் அன்புக் கணவரும், நிதுஷா, றோய் நிதுஷன், தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆசீர் இன்று (26.08.2024) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் உத்தரிய மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியோடு வசாவிளான் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 076 261 9440
தகவல்: குடும்பத்தினர்
(CS 56022) N-1

## நினைவஞ்சலிகள்

47 ஆம் ஆண்டு



மலர்வு 24 . 07 . 1929
உதிர்வு 15 . 05 . 1977

### வைரமுத்தது இளையதம்பி

(சைக்கிள் கடை மணியம்)
திதி: வைகாசி அமாவாசை

2 ஆம் ஆண்டு



மலர்வு 06 . 04 . 1936
உதிர்வு 18 . 09 . 2022

### இளையதம்பி யோகேஸ்வரி

திதி: புரட்டாதி அபரபட்ச அட்டமி

ஈன்றுவந்து நன்னெறியில் செலுத்தி வளர்த்தீர்
சான்றோர் எனும் நிலையில் உயரத்தி காத்தீர்
ஈராண்டு சென்றதம்மா எந்தையுடன் இணைந்தீர்
தோன்றியே எம் நினைவில் என்றும் நிலைப்பீர்
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈஸ்வரிவாசா
கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி.
077 376 0575

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் ஓரணியில் திரள வேண்டிய காலம்

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி யாழ்ப்பாணத்தில் அறைகூவல்!

யாழ்ப்பாணம், ஓக. 26

கடந்த கால எம் இன வரலாற்றில் குருதிக் கறைகள் ஏராளமாகக் காணப்படும் நிலையில் அந்தக் கறைகளை நாம் வெறும் கண்ணீர்விட்டு மாத்திரம் நாம் அழித்துவிட முடியுமா? அழித்தால் போதுமா? இவற்றிலிருந்து நாம் பாடம் கற்று எத்தனை வேறுபாடுகள் எமக்குள்ளிருந்தாலும் ஓரணியில் நாம் திரண்டாக வேண்டும். அந்தக் காலகட்டம் நெருங்கி வந்திருக்கிறது எனத் தமிழகத்தின் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதலாவது தமிழரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை யாழ். நகரிலுள்ள றிம்மர் மண்டபத்தில் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போர் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் ஈழத் தமிழ்மக்களுக்கான உரிமைகள் இன்னமும் நிலைநாட்டப்படவில்லை. 15 வருடங்கள் கடந்துவிட்டது என்று நாம் வெறுமனே கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தால் மாத்திரம் போதுமா?, ஒருவருக்கு ஒருவர் துக்கம் விசாரித்துக் கொண்டிருந்தால் மாத்திரம் போதுமா? தமிழின உரிமைகளுக்காக எத்தனை அரசியல் தலைவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். எத்தனை ஆயிரம் ஆயிரம் போராளிகள், மக்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்துள்ளனர். இவ்வாறான இழப்புகளுக்குப் பின்னால் நாங்கள் எவ்வாறான பாடத்தைக் கற்றுக்கொண்டுள்ளோம்? என்ன மாற்றத்தைத் தேட இருக்கின்றோம்? என்பது தொடர்பில் நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்திக்கும் வேளையில் நமக்குள் வேறுபாடுகள் இருக்கக்கூடாது.

பொது இலக்கு, பொதுப் போராட்டம் ஆகிய விடயங்களில் பொது நோக்குடன் நாம் ஒன்றுசேரும் போது நண்பன் யார்? எதிரி யார்? என்பதை நாம் சரியாக அடையாளம் காண வேண்டும். நண்பனை எதிரியாகக் கருதக்கூடாது. நண்பனை எதிரியாகவும் நம்பிவிடக் கூடாது. எது நம்மைப் பிரிக்கிறது என்பதைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது. பிரிப்பதை அலட்சியப்படுத்துங்கள். ஒன்றுபட வேண்டிய நேரத்தில் நம்மை இணைப்பதை அகலப்படுத்துங்கள். ஆழப்படுத்துங்கள்.

தமிழ்மக்களின் மொழி உரிமை, இன உரிமை, பண்பாட்டு உரிமை போன்ற அனைத்து உரிமைகளுக்காகவும் நாம் எம்மை ஆழமாக அகலப்படுத்தவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது - என்றார். (அ-ஒ-66)






பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கமத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவால் ஆடு வளர்க்கும் திட்டத்தின்கீழ் 7 பயனாளிகளுக்கு 21 ஆடுகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் பிரதேச செயலர், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், கமநல காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தர், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-9-13)

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவின் எண்ணக் கருவுக்கமைய பலாலி சந்தியில் பொதுமக்கள் சிறுவர்களுக்கான பொழுது போக்கு அம்சத்தை மேம்படுத்துமுகமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட கால்பந்தாட்ட மைதான திடல் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் ராணுவ தளபதியினால் வழங்கி வைக்கப்பட்டது. (ச-22, 23)



## தேசியமட்ட உதைபந்தாட்ட அணியில் மன். சவேரியார் பாடசாலை மாணவன்




மன்னார், ஓக.26

17 வயதுக்குட்பட்ட தேசிய உதைபந்தாட்ட அணியில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் கிதுஷன் இணைக்கப்பட்டுள்ளார். மேற்படி பாடசாலையில் இருந்து தேசிய மட்ட உதைபந்தாட்ட குழுக்களுக்குத் தெரிவாகிச்செல்லும் 7 ஆவது மாணவன் கிதுஷன் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25-213)



## பாடசாலைக் கூரைமீது முறிந்து விழுந்த வேம்பு!

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக யாழ். உரும்பிராய் பகுதியில் உள்ள சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறைமீது மலைவேம்பு ஒன்று முறிந்து விழுந்துள்ளதாக யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். பாடசாலையின் கூரைப்பகுதி சேதமடைந்திருப்பதாகவும், மரத்தைவெட்டி அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-25- 27)



## புதிய நிர்வாகத் தெரிவு

மன்னார், ஓக.26

மன்னார் மாவட்ட பௌத்த சாசன பாதுகாப்புச் சபையின் புதிய நிர்வாகிகள் தெரிவு, மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது மன்னார் மாவட்ட பௌத்த சாசன பாதுகாப்புச் சபைத் தலைவராக மன்னார் - மாதோட்ட விகாரை வண அம்பகவகே சங்கர் ரகித்த குருவும், செயலாளராக முருங்கன் புராதன மஹாவிகாரை பிரதம குரு அப்பிவண வல்பொல சரண குருவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் பொலிஸ் அலுவலர்: தாக்க முற்பட்டதாகக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 26

அரச அலுவலரை தாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - புங்குடுதீவு மடத்துவெளியில் கடற்படை முகாமுடன் இணைந்து பொலிஸ் காவலரண் உள்ளது. அங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மது போதையில் கடமையில் இருந்த பொலிஸ் அலுவலர், மோட்டார் சைக்கிளில் வந்த அரச அலுவலரை வழிமறித்து, ஆவணங்களைப் பார்வையிட்டுள்ளார். பின்னர் அவருடன் வாய்த்தர்க்கப்பட்டு தாக்க முயற்சித்துள்ளார். அது தொடர்பில் பாதிக்கப்பட்டவரால், ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து மதுபோதையில் கடமையில் இருந்த பொலிஸ் அலுவலரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ-ஒ-20-26-27)

**வான்கள் வாடகைக்கு உண்டு**

வான்கள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **075 090 6486**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியை திருமதி லோகினி சத்தியராஜ் அவர்களின் அன்புத் தாயார்

**கிறிஸ்டபெல் காந்திமதி பாலகுமாரநாதன்**

(ஓய்வுபெற்ற கனிஷ்ட நிறைவேற்று அதிகாரி-இலங்கை வங்கி)



தோற்றம் 18.06.1948 மறைவு 24.08.2024

அவர்கள் நேற்று 24.08.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்ததை இட்டு வேதனையடைகிறோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்
யா/மண்டதீவு றோ.க.வித்தியாலயம்

(CS 1215)V-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 09 . 1950



மறைவு 23 . 08 . 2024

## கைலாயபிள்ளை கணேசலிங்கம்

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியையும் தற்போது திருநெல்வேலி கேணியடியினை வதிவிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை கணேசலிங்கம் கடந்த (23.08.2024) வெள்ளிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், தன்யா (Phd - Geotechnical Engineer - UK), சுபாங்கினி (Graphic Designer / Denmark), சிந்தூரி (MSc - Geotechnical Engineer - USA), நிவேதனா (Manager Operations - HSBC Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அபராஜிதன், கண்ணன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், பராசக்தி, கனகரத்தினம், சரஸ்வதி மற்றும் பொற்கொடி, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சுப்பிரமணியம், கனகமணி, வேலாயுதம், கந்தசாமி மற்றும் கனகாம்பிகை, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் காலஞ்சென்றவர்களான சுபாஜினி, கமலினி மற்றும் சாந்தகுமார், நந்தகுமார், வசந்தகுமாரி, சுபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஏகன், ஸ்வரா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி (பாற்பண்ணை) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக்கொள்ளவும்.

இல.21 /4, கேணியடி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 348 6983, 077 746 9627

(CS 1247)(2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 11 . 1933



மறைவு 24 . 08 . 2024

### டல்சி ஜெயவதி லோரன்ஸ்

(முன்னாள் ஆசிரியை - அளுத்கம முஸ்லீம் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை நல்லாயன் கான்வென்ட், மானிப்பாய் RCTMS, மற்றும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

எங்கள் அருமைத் தாயார் டல்சி ஜெயவதி லோரன்ஸ் அவர்கள் ஆகஸ்ட் 24, 2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜே.பி.நாகலிங்கம் மற்றும் கிரேஸ் ஜெயமணி ஆகியோரின் இளைய மகளும், பென் லோரன்ஸின் அன்பான மனைவியும், ஷெரீன், காலஞ்சென்ற ஷேர்லி மற்றும் மொரீன், மோலி, டல்ரீன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆதித்தன் மற்றும் ரஞ்சித் விஜயரத்தினம், தமயந்தி ஆகியோரின் அன்பான மாமியாரும், நிவேதா, ஷாமலின் (ஸ்வீட்டி), டெவின், டியன்னா, ஷெரன், டன்யா, டனிஷா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்றவர்களான டெய்சி தர்மராஜா, டானியல் ஜூலியஸ் யோகரட்னம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.08.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல: 12/6, நாகலிங்கம் டெரஸ், மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக மானிப்பாய் CACM சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோலி லோலரன்ஸ் (மகன்)
தொலைபேசி எண்: 0777316487

(CS 1216) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1939



மறைவு 25 . 08 . 2024

### நவரத்தினம் புவனேஸ்வரி

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் புவனேஸ்வரி நேற்று (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அமிர்தலிங்கம், செல்லம்மா, கந்தநாதன் மற்றும் இராமச்சந்திரன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நக்கீரன், சிவாஜினி, சுபாஜினி (கீதா) பாசமிகு தாயாரும், கிரியா, சாந்தீஸ்வரன், கைலாயநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனுயன், துளசி, தனுசன், சர்திகா - சயந்தன், துவியன் - சிதம்பரபாரதி, ஆரபி - லவன், அஜீவன் - விஷாந்திரி அயந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அபிஷாந், கவிஷாந், விஷாந், மஹா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
077 6544 393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிக்குரிய...

யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"1950 ஆம் ஆண்டைத் திரும்பிப் பார்த்தால் எங்களின் ஏற்றுமதி வருமானம் 316 மில்லியன் டொலராகும். தென்கொரியாவின் ஏற்றுமதி வருமானம் 25 மில்லியன் டொலர். தென்கொரியாவை விட 12 மடங்கு அதிகமான ஏற்றுமதி வருமானம் எமக்கு கிடைத்துள்ளது. இப்பொழுது எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர். தென்கொரியாவின் ஏற்றுமதி வருமானம் 685 பில்லியன் டொலர். தற்போது எமது ஏற்றுமதி வருமானத்தை விட 50 மடங்கு அதிகமானதாகும். இதற்குக் காரணம் என்ன? உலகம் ஒரே இடத்தில் நின்றுவிடமாட்டாது. பொருளாதாரம், சிந்தனைகள், சந்தை இவை மாறிவருகின்றன. அந்த மாற்றங்களில் மிகப்பெரியவை 20 ஆம் நூற்றாண்டிலேயே இடம்பெற்றன. இந்த 20 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற தொழில்நுட்பத்தின், விஞ்ஞானத்தின் புதிய சந்தையின் மாற்றங்களை நாங்கள் கைப்பற்றிக்கொள்ளத் தவறிவிட்டோம்.

இலங்கையிலிருந்த இந்தியப் படையினர் இந்தியாவுக்குச் செல்லும்போது சவர்க்காரமும் தேங்காய் எண்ணெயையும் எடுத்துச்செல்வார்கள். 1987 இல் இது நடந்தது. இன்று அந்த இந்தியா எங்கே இருக்கிறது? சந்திரனுக்குப் போய்விட்டது. இது 40 வருடங்களுக்குள் ஏற்பட்ட மாற்றமாகும். ஏனென்றால், உருவாகிய மாற்றங்களைக் கைப்பற்றிக் கொள்ள அந்த ஆட்சியாளர்களுக்கு முடியுமாயிற்று. நாங்கள் அதில் தோல்விகண்டோம். எங்களுடைய பொருளாதாரத்தை விரிவாக்கிக் கொள்வதில் தோல்வியடைந்தோம். உலக சந்தையில் எங்களுடைய பங்கை வளர்த்துக்கொள்வதில் தோல்விக்கண்டோம். விஞ்ஞானம், தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் பயன்படுத்தி எங்களுடைய உற்பத்திச் செலவினைக் குறைத்துக் கொள்வதில் நாங்கள் தோல்விகண்டோம். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மூலமாக எங்களுடைய பண்டங்களின் தரத்தை மேம்படுத்துவதில் நாங்கள் தோல்விகண்டோம். அதனால், நேர்ந்ததென்ன? உலகில் தனிமைப்படுத்தப்பட்ட, உலகத்துக்கு ஒத்துவராத ஒரு நாடாக நாங்கள் மாறினோம். அப்படியானால், இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்டுள்ள சவால் வறுமையின் அடிமட்டத்துக்கே சென்றுள்ள, உலகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு நேரொத்ததாக பொருளாதாரம், கல்வி ஆகிய எல்லாவற்றையும், விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் முன்னேற்றங்கள் இவை எதையுமே உலகத்துடன் இணைத்துக் கொள்வதில் தோல்விகண்ட ஒரு நாடாக மாறியிருக்கிறோம்.

எதிர்கால உலகத்தில் ஆதிக்கம் செலுத்துவது மிக அதிகமான தொழில்நுட்ப பலத்தைகொண்ட நாடாகும். அதுதான் எதிர்கால உலகத்தை ஆளப்போகின்றது.

நாங்கள் எந்த அளவுக்கு உலகிலே விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் வளர்ச்சியைக் கைப்பற்றிக்கொண்டு புத்தாக்கங்களைச் செய்ய நாங்கள் தாயரா என்கின்ற காரணியிலேயே எங்களுடைய முன்னேற்றம் தங்கியிருக்கிறது. நாங்கள் மின்சாரக்கார் உற்பத்தி செய்வதில் தள்ளப்பட வேண்டுமென நான் கூறப் போவதில்லை. நாங்கள் மிகவும் பின்னாலேயே இருக்கிறோம் எனவே எங்களால் இப்போது அந்தப் போட்டியில் பிரவேசிக்கமுடியாது.

எனவே, நாங்கள் புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையை தெரிவு செய்யவேண்டும். எந்தத் துறையில் எங்களுடைய பொருளாதாரம் புத்தாக்கங்களுக்குச் செல்லவேண்டும் என்ற விடயங்களை அறிந்து கட்டாயமாக நாங்கள் அந்த இடத்துக்குச் செல்லவேண்டும். எனவே, நாங்கள் அண்மையில் எங்களுடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான கொள்கையை முன்வைத்து ஒரு சில துறைகளை இனங்கண்டோம். எமது நாட்டில் ஆயுள்வேதத் துறையில் விருத்தி செய்வதற்கான வாய்ப்பு வசதி எமக்கு இருக்கின்றது. எமது சுற்றுலாத்துறை ஊடாக எங்களால் முன்னேறிச் செல்லமுடியும். எமது கனிம வளங்கள் ஊடாக எங்களால் அபிவிருத்திப் பாதையில் செல்ல முடியும். ஆனால், அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான செலவை ஏற்க நேரிடும். விஞ்ஞானிகளைத் தேடிக்கொள்ளவேண்டும். இது எங்களுடைய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான ஒரு பாதையாகும். உலகச் சந்தையில் ஒரு பங்கைக் கைப்பற்றிக் கொள்வதற்கான ஒரு முறைதான் இந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையாகும்.

மேலும், உங்களிடம் இருந்து பெறப்பட்ட மாதாந்த வரியில் இருந்து கல்விக்காக இவ்வளவு, சுகாதாரத்துக்காக இவ்வளவு, பாதுகாப்புக்காக இவ்வளவு என்ற விவரங்கள் மூலம் நீங்கள் செலுத்திய வரிக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளலாம். வரி செலுத்துபவருக்குத் தான் செலுத்திய வரிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்கான நியாயமான உரிமை இருக்கின்றது. அப்போது எவருமே வரி செலுத்துவதை தவறவிடமாட்டார்கள். எனவே, செலுத்துகின்ற வரிக்கு என்ன நடக்கின்றது எனத் தெரியாததன் காரணமாகவே வரி செலுத்துவதைத் தவிர்த்து வருகிறார்கள். நீங்கள் செலுத்துகின்ற ஒவ்வொரு சதத்தையும் கோயில் சொத்துப்போல பராமரித்து பாதுகாப்போம்.

எனவே, இந்த மாற்றம் எங்களுக்குத் தேவை எனக் கருதுகிறோம். அந்த மாற்றத்துக்காகத்தான் எதிர்வரும் 21 ஆம் திகதி நாங்கள் வாக்களிக்கப் போகிறோம். இது வெறுமனே ஒரு தலைமையை மாற்றுவது மாத்திரமல்ல, இதுவொரு சவால். ஆனால், கட்டம் கட்டமாக இந்த சவாலை வெற்றிகொண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காக 21 ஆம் திகதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" - என்றார். (அ-ஒ-இ)

## 50 கிலோ...

நிவாரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரம், தம்புத்தேகம நகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பேருந்தை தம்புத்தேகம வித்தியாலயத்துக்கு வழங்கி 48 மணித்தியாலங்கள் கடக்க முன்பு வெற்றுத்தலைவர்கள் சிலர் எனக்கு 'பஸ்மனிதன்' என்று பெயர் சூட்டினார்கள். 76 வருட ஜனநாயக வரலாற்றைக் கொண்ட இலங்கை நாட்டில் முதல் தடவையாக ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்து இந்த அளவுக்கு சேவைகளைச் செய்திருக்கின்றது.

வெற்றுப் பேச்சுத் தலைவர்களால் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது. வேலை செய்யக்கூடியவர்களால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்பமுடியும்.

உயிர்த்தஞாயிறுத்தாக்குதல், கொரோனா அச்சுறுத்தல், உர மோசடி, நானோ உர ஊழல் போன்றவற்றின் ஊடாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். தம்முடைய சொத்துகளையும், தங்க ஆபரணங்களையும் அடகு வைத்து விவசாயம் செய்தவர்கள் இன்று கடன் சுமைக்குள் சிக்குண்டு காணப்படுகின்றார்கள். எனவே இந்த விவசாயக் கடன்களை இரத்துச் செய்வோம்.

அரசாங்கத்தோடு நட்புறவுடன் நடந்து கொண்டிருக்கின்ற உயர்நிலையில் உள்ள செல்வந்தர்களின் கடன்களை இரத்துச் செய்ய முடியும் என்றால், அப்பாவிகளான இந்த விவசாயிகளின் கடன்களையும் இரத்துச் செய்ய முடியும். உயர் நிலையில் உள்ள செல்வந்தர்களுக்கு மாத்திரமில்லாமல் இந்த விவசாயிகளுக்கும் சமமான இடம் கொடுக்கப்பட வேண்டும். செல்வந்த நட்புறவாளர்களுக்காக இரத்து செய்யப்பட்ட இந்த கடன்களை மீண்டும் பெற்றுக் கொள்வதோடு, அந்தப் பணத்தின் ஊடாக விவசாயிகளின் கடன்களை இரத்து செய்வோம்.

மேலும் நுண்நிதிக் கடன் பொறிக்குள் சிக்கி இருக்கின்ற மக்களை மீட்டெடுப்பதோடு அதற்கு மேலதிகமாக விவசாயத்துக்காக நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு இலகு கடன் முறையையும் அறிமுகப்படுத்துவோம். அத்தோடு 10 இலட்சம் புதிய தொழில் முனைவர்களை உருவாக்கி தொழில் வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியுமான செலவுடன் கூடிய மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தத் துறைக்குள் பிரவேசிக்க கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவோம்" - என்றார். (அ-ஒ-இ)

## வன்னித்...

86 ஆயிரத்து 889 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

அத்துடன் 13 ஆயிரத்து 389 தபால்மூல வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளதுடன் 228 தபால்வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை - தேர்தலில் வாக்களிப்பதற்காக மூன்று மாவட்டங்களிலும் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. சாதாரண வாக்குஎண்ணும் பணிகளுக்காக வவுனியாவில் 12, முல்லைத்தீவில் 8, மன்னாரில் 7 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் தபால்வாக்குகள் எண்ணுவதற்காக 10 நிலையங்களும் என மொத்தமாக 37 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன - என்றார். (அ-ஒ-18-110)

## வடக்கு...

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்புக்குச் சென்ற கல்வி உயர் அதிகாரிகள் சிலர் இரத்மலானை அரசினர் சுற்றுலா விடுதியில் மதுபோதையில் அநாகரிகமாக நடந்துகொண்டமை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதம செயலாளர் அலுவலகம் வடமாகாண கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பி இருந்தது. வடமாகாணக் கல்வி அமைச்சு குறித்த விடயம் தொடர்பாக வடமாகாணக்கல்வித்திணைக்களத்திடம் விளக்கம் கோரிய நிலையில் உரிய காலப்பகுதியில் வட மாகாணக் கல்வித்திணைக்களம் கல்வி அமைச்சுக்குப் பதிலளிக்கவில்லை.

இந்நிலையில் வட மாகாண பிரதம செயலாளர், குறித்த விடயம் தொடர்பான விசாரணை அறிக்கை கிடைக்கப்பெறும் வரை அதிகாரிகள் எவரும் இரத்மலானை அரச விடுதியைப் பயன்படுத்தக்கூடாது எனத் தடை விதித்து எழுத்து மூலம் கடிதம் அனுப்பி இருந்தது.

இந்நிலையில் மாகாணக்கல்விப் பணிப்பாளராக இருந்த ஜோன் குயின்டரஸ் பணியிடமாற்றம் பெற்று கொழும்புக்குச் சென்ற நிலையில் புதிய மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கீழ் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டன.

இரத்மலானை அரச விடுதியில் அநாகரிகமாக நடந்துகொண்ட அதிகாரிகள் மீதான விசாரணைகள் முடிவுக்கு வந்த நிலையில் தொடர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பான விவரங்களைத் தருமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டம்மூலம் வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்துக்குக் கோரப்பட்ட நிலையில், அது தொடர்பாக நடவடிக்கையில் உள்ளதால் அதிகாரிகளின் பெயர் விவரங்களை வெளியிட பிரதம செயலாளர் செயலகம் மறுத்துள்ளது. (அ-ஒ-27)

## சிந்துஜாவின்...

உயிரிழந்துள்ளார். கடந்த மாதம் மன்னார் மருத்துவமனையில் பிரசவத்தின் பின்னரான குருதிப்போக்கால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிந்துஜா, மருத்துவத்துறையினரின் கவனயீனத்தால் அநியாயமாக உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மருத்துவ மாதுக்கள் இருவரும், தாதியர்கள் இருவரும், மருத்துவர் ஒருவருமாக 5 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிந்துஜாவின் கணவர் அவரது வீட்டில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முற்பட்ட நிலையில் மருத்துவனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் அங்கு உயிரிழந்துள்ளார். (அ-ஒ-110)

## நேரடி...

குமார திஸாநாயக்காவுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைச்செயலகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்த மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

"சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்போவதாக இவர்கள் கூறுகின்றனர். இவர்கள் முன்வைக்கும் திருத்தங்களுக்கு சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் என்ன பதில் சொல்கின்றனர் என்பதையும் பார்ப்போம்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

## அநுரகுமார...

இன்று வெளியிடவுள்ளார். மு.ப. 10 மணிக்கு தலவத்துகொட மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெறும் வைபவத்தின்போது தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையை நாளைமறுதினம் புதன்கிழமை வெளியிடவுள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்**
**180 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு**

- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி. 500 M, தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

**077 294 1521, 077 288 0152, 076 755 8606**

(CS 1214) V-1


நல்லூரில் இன்று

## கார்த்திகை உற்சவம்: நாளை சூர்யோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 26

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் பதினெட்டாம் நாள் திருவிழாவான கார்த்திகை உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதேவேளை - நாளை செவ்வாய்க்கிழமை காலை சூர்யோற்சவம் இடம்பெறவுள்ளது. (ஒ-66)



## இடும்பன் வாகனத்தில் நல்லூர்க் கந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 26

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழாவின் பதினேழாம் நாள் மாலைத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது நல்லூர்க் கந்தப் பெருமான் இடும்பன் வாகனத்தில் வள்ளி தெய்வயானை நாயகியர் சகிதம் வீதி உலா வந்தார். (அ-ஒ-66)


## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வரவேற்பாளர் (Receptionist)
2. கிராபிக் டிசைனர் (Graphic Designer)



* இரவு / பகல்

மேல் குறிப்பிட்ட பணிநிலைகளுக்கு தகுதியுடையோர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு இன்று 26.08.2024 திங்கட்கிழமை காலை 9.00 முதல் பி.ப 2.00 மணி மற்றும் மாலை 6.30 முதல் இரவு 8.30 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன்

361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

கொள்வனவு செய்து 06 மாதங்களேயான புத்தம் புதிய ஸ்கூட்டி (NTORQ 125, T.V.S) 5000 Km ஓடியது விற்பனைக்குண்டு

405 பலாலி வீதி, ராசமணி திருமணமண்டபத்திற்கு அருகில் கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு: **075 798 4144**

(CS 56024) V-1

## தவறவிடப்பட்டுள்ளது

நயினாதீவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் நேற்று (25.08.2024) ஞாயிற்றுக் கிழமை கடவுச்சீட்டு (UK) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**தகுந்த சன்மானம் வழங்கப்படும்**

தொடர்பு: **077 966 8244**

(CS 1217) V-1


## குருபூசை

யாழ்ப்பாணம், ஓக. 26

ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச் சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணியளவில் கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பமாகித் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் குருபூசை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானமும் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-66)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 20 • 09 • 1939

இறைவன் அடியில் 25 • 08 • 2024



### யோகேஸ்வரி இராசரத்தினம்

(ஓய்வு நிலை ஆசிரியர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி இராசரத்தினம் நேற்று (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இராசரத்தினம் குகராஜா அவர்களின் அன்புத் தாயாரும், குகராஜா தயாமதியின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், சபாரத்தினம், மகேஸ்வரி, விஜயம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, யோகம்மா, இராசேந்திரம் மற்றும் நா.இராசலிங்கம் ஆகியோரின் நேசமிகு மைத்துனியும், கிரிஷ்காந்த், ஜதீஷா, காஷினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**இ.குகராஜா (மகன்)**
**077 666 0698**

(cs.56026)N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 06 • 1948

மறைவு 24 • 08 • 2024



### கிறிஸ்டபெல் காந்திமதி பாலகுமாரநாதன்

(சுட்டா)

(ஓய்வு பெற்ற கனிஷ்ட நிறைவேற்று அதிகாரி - இலங்கை வங்கி, யாழ். மேற்தரக்கிளை)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்டபெல் காந்திமதி பாலகுமாரநாதன் (சுட்டா) 24.08.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - புஸ்பமணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - கண்ணம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலகுமாரநாதனின் (கண்மணி) அன்பு மனைவியும், லோகினி (ஆசிரியை - யா / மண்டை தீவு றோ.க.வித்தியாலயம்), கஜனி (இலங்கை வங்கி Pettah) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐயங்கன்குளம் வைத்தியசாலை), கோபிராஜ் (பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் - திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியும், மதுஷன், கௌஷிக் கெய்ஃபர், லியாரா, பிரணவி ஆகியோரின் பேர்த்தியும், சத்தியதாசன், பத்மாவதி, தனலாவதி, சத்தியவதி, தேவதாசன், கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்**
**ச. சத்தியராஜ் - 076 623 7004** (மருமகன்)
**அ. கோபிராஜ் - 077 903 7540** (மருமகன்)

(cs.56025)N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.